புதிய படைப்பு சூழலில் மரபுக்கவிதையின் யாப்புப் பிடியிலிருந்து விடுபட்ட கவிதைகள் புதுக் கவிதைகள் எனப்பட்டன. இலகு, கவிதை, கட்டற்ற அடங்கா கவிதை என்று பல்வேறு பெயர்களில் புதுக்கவிதையை குறிப்பிடுகின்றனர்.

உரைநடையில் கவிதை எழுதுவதை பாரதி தம் வசன கவிதைகளின் வழியாக தொடங்கினார். அவற்றின் தொடர்ச்சியே புதுக்கவிதைகள். அவ்வகையில் புதுக்கவிதையின் வரலாறு 100 ஆண்டுகளை எட்டுகிறது எனலாம்.

புதுக்கவிதைகள் மனித நேயத்தை வலியுறுத்துனவாக உள்ளன. மரபு சார்ந்த செயல்களின் கட்டுப்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்ட கவிதைகளை புதுக்கவிதைகள் என்பர். படிப்போரின் ஆழ்மனதில் புதுக்கவிதை ஏற்படுத்தும் தாக்கமே முதன்மையானது. இது படிப்போரின் சிந்தனைக்கு ஏற்ப விரிவடையும் பன்முகத் தன்மை கொண்டது.

## 1. நா. பிச்சமூர்த்தி

| | |
|---|---|
| **இயற்பெயர்** | நா.வேங்கட மகாலிங்கம் |
| **பெற்றோர்** | நடேசன் – காமாட்சி அம்மாள் |
| **ஊர்** | கும்பகோணம் (தஞ்சாவூர் மாவட்டம்) |
| **காலம்** | 15–08–1900 முதல் 4–12–1976 வரை. |
| **தொழில்** | 1924 முதல் 1938 வரை வழக்குரைஞர், |
| | 1939 முதல் 1954 வரை இந்து அறநிலையத்துறை அதிகாரி. |

- இவர் **நவஇந்தியா** பத்திரிகையில் சிறிது காலம் பணியாற்றினார். சுதேசமித்திரன், சுதந்திர சங்கு, தினமணி, மணிக்கொடி போன்ற பத்திரிகைகளில் இவரது படைப்புகள் வெளிவந்துள்ளன.
- ந.பிச்சமூர்த்தி, கு. ப. இராசகோபாலன் ஆகிய இருவரும் புதுக்கவிதையின் இரட்டையர்கள். வள்ளிக்கண்ணன் கூற்று.

⇒ **சிறப்பு பெயர்கள்:**
- புதுக்கவிதையின் முன்னோடி
- தமிழ் புதுக்கவிதையின் தந்தை
- தமிழ் புதுக்கவிதை இயக்கத்தின் தோற்றுநர்
- புதுக்கவிதை இயக்கத்தின் விடிவெள்ளி.

⇒ **புனைப்பெயர்கள்:**
- ரேவதி
- பிச்சு
- ந.பி.

⇒ **சிறுகதைகள்:**
- ✓ பதினெட்டாம் பெருக்கு
- ✓ மோகினி
- ✓ மாங்காய் தலை
- ✓ காபூலிக் குழந்தைகள்
- ✓ விஜயதசமி
- ✓ நல்ல வீடு
- ✓ விஞ்ஞானத்திற்குப் பலி
- ✓ ஒரு நாள்
- ✓ முள்ளும் ரோசாவும்
- ✓ இரட்டை விளக்கு
- ✓ மாயமான்

⇒ **புதுக்கவிதை:**
- ✓ கிளி குஞ்சு
- ✓ கிளி கூண்டு,
- ✓ காட்டுவாத்து
- ✓ பூக்காரி
- ✓ ஆத்துாரான்
- ✓ புதுக்குரல்கள்.
- ✓ மூட்டை
- ✓ வழித்துணை
- ✓ காதல்
- ✓ உயிர் மகள்,

## 2. சி.சு.செல்லப்பா

| | |
|---|---|
| **இயற்பெயர்** | செல்லப்பா |
| **பெற்றோர்** | சுப்பிரமணிய ஐயர் – அலமேலு அம்மாள் |
| **மனைவி** | மீனாட்சி அம்மாள் |
| **காலம்** | 29– 09–1912 முதல் 18–12–1998 |
| **ஊர்** | சின்னமனுார் (தேனி மாவட்டம்) |

- சின்னமனூர் சுப்பிரமணியன் செல்லப்பா என்பதை சுருக்கி சி.சு செல்லப்பா என அமைத்துக் கொண்டார்.
- விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறைக்குச் சென்றுள்ளார். இவருடைய சுதந்திர தாகம் என்ற படைப்பிற்காக 2001 – இல் 'சாகித்திய அகாதமி' விருதினை பெற்றுள்ளார். இவர் சந்திரோதயம், தினமணி ஆகிய இதழ்களில் உதவி ஆசிரியராக பணியாற்றியுள்ளார்.

மொழி என்ற ஒன்று பிறந்தவுடன்
உலகம் என்பதும், நான் என்பதும்
தனித்தனியாக பிரிந்து தங்களை
தனித்துவமாக நிலை நிறுத்திக்
கொள்கின்றன.

**– எர்னெஸ்ட் காசிரர்**

**(ஜெர்மன் தத்துவஞானி)**

⇒ **<u>இவருடைய படைப்புகளில் சில:</u>**

- சரசாவின் பொம்மை
- மணல் வீடு
- சி.ச.செல்லப்பாவின் கவிதைகள்
- வாடிவாசல்
- ஜீவனாம்சம்
- முறை பெண்
- மாற்று இதயம்
- இன்று நீ இருந்தால்
- **எழுத்து** என்ற பத்திரிகை நடத்தி வந்தார்.
- இவரது படைப்புகளில் மெரீனா, அணுவுக்கு முன், மீட்சி போன்றவை புகழ்பெற்றவை.
- வாடிவாசல், சுதந்திர தாகம், ஜீவனாம்சம், பி.எஸ்.ராமையாவின் சிறுகதைப்பாணி, தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது.

## 3. <u>தருமு. சிவராமு</u>

| | |
|---|---|
| **ஊர்** | இலங்கையில் உள்ள திருகோணமலை |
| **காலம்** | 20–04–1939 முதல் 6–01–1997 வரை |
| **புனை பெயர்கள்** | பிரமில், பானு சந்திரன், அரூப் சிவராம் |
| **இவருடைய படைப்புகளில் சில** | கண்ணாடி உள்ளிருந்து கைப்பிடி அளவு கடல், மேல்நோக்கிய பயணம், பிரமில் கவிதைகள், லங்காபுரி ராஜா, மார்க்சும் மார்க்சியமும், நட்சத்திர வாசி, மீறல், கவிதை கோட்பாடுகளும் பாரதி கலையும், விடிவு, எரிகல், கல் வீச்சு, மின்னல். இவர் எழுத்து என்ற பத்திரிகையில் கவிதைகள் எழுதியுள்ளார் புதுமைப் பித்தன் விருதினை பெற்றுள்ளார். **'தமிழின் மாமேதை என்று தி ஜானகிராமனால்'** பாராட்ட பெற்றவர். |

## 4. <u>இ.ரா. மீனாட்சி</u>

| | |
|---|---|
| **பெற்றோர்** | இராமச்சந்திரன்– மதுரம் அம்மையார் |
| **ஊர்** | திருவாரூர் |
| **இவருடைய படைப்புகளில் சில** | நெருஞ்சி, சுடு பூக்கள், தீபாவளிப்பகல், உதய நகரில் இருந்து மறுபயணம், வாசனைப் புல், கொடிவிளக்கு, இந்திய பெண்கள் பேசுகிறார்கள், செம்மண் மடல். |

- இவர் 2006– இல் தமிழ் வளர்ச்சி துறையின் விருதினை பெற்றுள்ளார்.
- 2010–ல் கவிக்கோ விருதினை பெற்றுள்ளார்.
- 2012–இல் செம்மண் மடல் என்ற இவரது படைப்பு சிறந்த நூலாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.மேலும் புதுவை அரசின் கல்லாடனார் விருதினையும், சித்த மருத்துவ சேவைக்காக சித்த மருத்துவ சேவை செம்மல் என்ற விருதினையும் பெற்றுள்ளார்.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

## 5. சி.மணி

| | |
|---|---|
| **இயற்பெயர்** | எஸ்.பழனிச்சாமி |
| **காலம்** | 1936 முதல் 2009 வரை |
| **புனை பெயர்கள்** | சி.மணி, வே.மாலி |

- ஆங்கில பேராசிரியராக பணியாற்றியவர். இருமுறை தமிழ் பல்கலைக்கழக விருது, ஆசான் கவிதை விருது, சிற்பி விருது, விளக்கு இலக்கிய விருது ஆகியவற்றை பெற்றுள்ளார்.
- இவர் 1959 முதல் எழுத்து இதழில் இவர் இவரது கவிதைகள் வெளிவந்துள்ளன நடை என்னும் சிற்றிதழை நடத்தியுள்ளார்.
- **'தாவோ தேஜிங்'** என்னும் சீன மெய்யியல் நூலை தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

⇒ **இவரது படைப்புகளில் சில:**

1. வரும்போகும்
2. ஒளிச்சேர்க்கை
3. இதுவரை
4. நகரம்
5. நிலவுப் பெண்
6. நாட்டியக்காளை
7. உயர்குடி
8. அலைவு
9. குகை
10. தீர்வு
11. முகமூடி
12. பழக்கம்
13. பாரி
14. நரகம்
15. பச்சையம்
16. யாப்பும் கவிதையும்.

## 6. ஈரோடு தமிழன்பன்

| | |
|---|---|
| **இயற்பெயர்** | ஜெகதீசன் |
| **பெற்றோர்** | செ.நடராஜன்–வள்ளியம்மாள் |
| **ஊர்** | சென்னிமலை (கோவை மாவட்டம்) |
| **புனைப்பெயர்** | விடிவெள்ளி |

- ஆயிரம் அரங்கம் கண்ட **கவியரங்க கவிஞர்** என புகழப்படுகிறார்.
- சென்னை தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராக பணிபுரிந்தார்.
- தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் நிர்வாக குழு உறுப்பினராக இருந்து உள்ளார்.

⇒ **இவருடைய படைப்புகளில் சில:**

- சிலிர்ப்புகள்
- தோனி வருகிறது (முதல் கவிதை)
- விடியல் விழுதுகள்
- தீவுகள் கரையேறுகின்றன
- நிலா வரும் நேரம்
- சூரியப்பிறை
- ஊமை வெயில்
- திரும்பி வந்த தேர்வலம்
- ஒருநாள் முந்தி
- வணக்கம் வள்ளுவ!
- சாகித்திய அகாதமி விருது பெற்றது (தமிழன்பன் கவிதைகள்)
- தமிழக அரசு விருது பெற்றது (சிகரங்கள் விரியும் சிறகுகள்).

## 7. அப்துல் ரகுமான்

| | |
|---|---|
| **பெற்றோர்** | உருது கவிஞரான மகி என்னும் சையத் அகமத் ஜெயினத் பேகம் |
| **ஊர்** | மதுரை |
| **காலம்** | 9–11–1937 முதல் 2–06–2017 வரை |
| **பணி** | வாணியம்பாடி இஸ்லாமிய கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். |
| **சிறப்புபெயர்** | கவிக்கோ |

- வானம்பாடி இயக்க கவிஞர்களோடு இணைந்து இயங்கியவர். இவருடைய கவிதைகளில் உவமைகள், உருவகங்கள், வடிவங்கள், குறியீடுகள் ஆகியவற்றின் வழி வெளியீட்டு முறையை அமைத்துக் கொண்டார்.
- தமிழில் ஹைக்கூ, கஜல் ஆகிய பிற மொழி இலக்கியங்களை பரப்பியதில் இவர் குறிப்பிடத்தக்கவர் ஆவார். 'மரபுக்

கவிதையின் வேர் பார்த்தவர்' 'புதுக்கவிதையில் மலர் பார்த்தவர்' என்றும் வானத்தை வென்ற கவிஞன், சூரிய கவிஞன், தமிழ்நாட்டு இக்பால் என்றும் புகழப்படுகிறார்.

⇒ **இவருடைய படைப்புகளில் சில:**

- பால்வீதி
- நேயர் விருப்பம்
- கரைகளில் நதியாவதில்லை
- அவளுக்கு நிலா என்று பெயர்
- முட்டைவாசிகள்
- மரணம் முற்றுப்புள்ளி அல்ல
- விலங்குகள் இல்லாத கவிதை
- சொந்தச்சிறைகள்
- புதுக்கவிதையில் குறியீடு
- சுட்டுவிரல்
- விதை போல் விழுந்தவன்
- கம்பனின் அரசியல் கோட்பாடு
- ஆலாப்பனை (சாகித்ய அகாடமி விருது பெற்றது 1999)
- பித்தன்
- பசி எந்த சாதி ?
- பாலை நிலா
- கண்ணீர் துளிகளுக்கு முகவரி இல்லை
- தேவகானம்
- பறவையின் பாதை
- ரகசிய பூ,
- மின்மினிகளால் ஒரு கடிதம்
- இவர் குணங்குடியார் பாடல் கோவை என்ற நூலை பதிப்பித்துள்ளார்.

⇒ **இவர் பெற்ற விருதுகள்**

- ஆலாபனை– சாகித்திய அகாதமி விருது
- தமிழக அரசின் பாரதிதாசன் விருது
- தஞ்சை பல்கலைக்கழகத்தின் தமிழ் அன்னை விருது
- கவியரசர் பாரி விழா விருது குன்றக்குடி அடிகளார் வழங்கியது
- தமிழக அரசின் கலை மாமணி விருது
- சிற்பி அறக்கட்டளை விருது, கலைஞர் விருது, ராணா இலக்கிய விருது
- கொழும்பு கம்பன் கழகம் வழங்கிய கம்பன் காவலர் விருது, கம்பன் கழகத்தின் கம்பன் விருது
- உமறுப்புலவர் விருது.

## 8. சிற்பி

| | |
|---|---|
| **இயற்பெயர்** | பாலசுப்பிரமணியம் |
| **பெற்றோர்** | பொன்னுசாமி– கண்டியம்மாள் |
| **பிறந்த ஊர்** | ஆத்து பொள்ளாச்சி கோவை மாவட்டம் |
| **பிறந்த ஆண்டு** | 1936 ஜூலை 29 |
| **பணி** | கவிஞர், பேராசிரியர், எழுத்தாளர், சாகித்திய அகாதமி ஒருங்கிணைப்பாளர் |

- முதலில் பொள்ளாச்சி நல்ல முத்து மகாலிங்கம் கல்லூரியில் விரிவுரையாளராக பணியாற்றினார். 1989 முதல் 1997 வரை கோவையில் பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ் துறை தலைவராக பணியாற்றினார்.
- இவர் வானம்பாடி கவிதா மண்டலத்தைச் சேர்ந்தவர்.
- மொழி பெயர்ப்புக்காகவும் (2002) படைப்பிலக்கியத்திற்காகவும் (2003) இருமுறை சாகித்திய அகாதமி விருது பெற்றவர்.
- மேலும் தமிழக அரசின் பாவேந்தர் விருது, குன்றக்குடி ஆதீனத்தின் கபிலர் விருது,மூத்த எழுத்தாளருக்கான லில்லி தேவசிகாமணி விருது என பல விருதுகளை பெற்றவர்.
- சிற்பி அறக்கட்டளை– 1996 இல் தொடங்கப்பட்ட சிற்பி அறக்கட்டளை தமிழில் சிறந்த கவிஞர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்கி வருகிறது.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

⇒ **இவருடைய கவிதை நூல்கள்:**

- நிலவுப் பூ
- சிரித்த முத்து
- ஒளி பறவை
- சர்ப்ப யாகம்
- புன்னகை பூக்கும் பூனைகள்
- மௌன மயக்கங்கள் (தமிழக அரசு பரிசு பெற்றது)
- சூரிய நிழல்
- இறகு
- சிற்பியின் கவிதை வானம் (திருப்பூர் தமிழ் சங்க விருது பெற்றது)
- ஒரு கிராமத்து நதி (சாகித்ய அகாடமி விருது பெற்றது)
- பூஜ்ஜியங்களின் சங்கிலி (தமிழக அரசு விருது பெற்றது)
- பெருமூச்சுகளின் பள்ளத்தாக்கு
- மூடுபனி
- மகாத்மா
- நீலக்குருவி
- தேவயானி
- பாரதி – கைதி எண் – 253

⇒ **கவிதை நாடகம் :** ஆதிரை

⇒ **சிறுவர் நூல்கள் :** சிற்பி தரும் ஆத்திசூடி, வண்ணப் பூக்கள்

⇒ **புதினங்கள் மொழிபெயர்ப்பு :**

- அக்கினி சாட்சி (சாகித்திய அகாதமி விருது பெற்றது)
- ஒரு சங்கீதம் போல
- வாரணாசி.மேலும் மொழிபெயர்ப்பு கவிதைகள், உரைநடை நூல்கள், வாழ்க்கை வரலாற்று நூல்கள் ஆகியவற்றை படைத்துள்ளார்.

## 9. மு .மேத்தா

| | |
|---|---|
| **இயற்பெயர்** | முகமது மேத்தா |
| **பிறந்த ஆண்டு** | 1945 செப்டம்பர் 5 |
| **ஊர்** | பெரிய குளம் |
| **பணி** | சென்னை மாநில கல்லூரியில் தமிழ் பேராசிரியராக பணியாற்றி ஒய்வு பெற்றவர். |

- ‘வானம்பாடி’ என்ற புதுக்கவிதை ஏட்டின் வாயிலாக ஆன கவிஞர்களுள் முன்னணியில் இருப்பவர்.
- பல திரையிசை பாடல்களையும் எழுதியுள்ளார்.
- தேசப்பிதாவுக்கு ‘ஒரு தெரு பாடகனின் அஞ்சலி’ என்ற கவிதை மு.மேத்தாவிற்கு புகழ் தேடி தந்த கவிதையாகும்.

⇒ **இவருடைய படைப்புகள்**

⇒ **கவிதைகள்:**

| | |
|---|---|
| • கண்ணீர் பூக்கள் | • ஆகாயத்தில் அடுத்த வீடு |
| • மனச்சிறகு | • மு.மேத்தா கவிதைகள் |
| • ஊர்வலம் | • ஒற்றை தீக்குச்சி |
| • திருவிழாவில் ஒரு தெருப்பாடகன் | • என் பிள்ளைத்தமிழ் |
| • நந்தவன நாட்கள் | • புதுக்கவிதைப் போராட்டம் |
| • வெளிச்சம் வெளியே இல்லை | • பித்தன் |

⇒ **நாவல் :** சோழ நிலா

⇒ **சிறுகதை :**

- மகுட நிலா
- அவளும் நட்சத்திரம்தான்

⇒ **விருதுகள்:**

- ஊர்வலம் கவிதை நூல் தமிழக அரசின் முதல் பரிசு

- சோழ நிலா நாவல் ஆனந்த விகடன் பொன்விழா இலக்கிய போட்டியில் முதல் பரிசு.
- ஆகாயத்தில் அடுத்த வீடு கவிதை நூல் சாகித்திய அகாதமி விருது 2006.

**“நான் வெட்ட வெட்டத் தழைப்பேன்**
**இறப்பினில் கண் விழிப்பேன்**
**மரங்களில் நான் ஏழை**
**எனக்கு வைத்த பெயர் வாழை”**

என்பன போன்ற வரிகள் இவர் கவிதை நடைக்கு எடுத்துக்காட்டாகும்.

## 10. கலாப்ரியா

| | |
|---|---|
| **இயற்பெயர்** | சோமசுந்தரம் |
| **பெற்றோர்** | கந்தசாமி– சண்முகவடிவு |
| **பிறந்த ஆண்டு** | 1950 ஜூலை 30 |
| **ஊர்** | திருநெல்வேலி |
| **பணி** | நெல்லையில் உள்ள கடையநல்லூரில் வங்கிப் பணி செய்து ஓய்வு பெற்றவர் |

- இவர் ‘கசடதபற’, ‘வானம்பாடி’, ‘கணையாழி தீபம்’ ஆகிய இதழ்களில் கவிதைகள் எழுதியுள்ளார்.

⇒ **இவருடைய படைப்புகள்**

- வெள்ளம்
- தீர்த்தயாத்திரை
- எட்டயபுரம்
- மற்றாங்கே
- சுயம்வரம்
- உலகெல்லாம்
- சூரியன் அனிச்சம்
- எல்லாம் கலந்த காற்று
- வனம் புகுதல்
- எல்லாம் கலந்த காற்று
- நினைவின் தாழ்வாரங்கள்
- நான் நீ மீன்
- உளமுற்ற தீ
- தண்ணீர் சிறகுகள்
- வனம் புகுதல்

**விருதுகள்**

- தமிழக அரசின் கலை மாமணி விருது
- கண்ணதாசன் இலக்கிய விருது
- கவிஞர் தேவமகள் இலக்கிய விருது
- சிற்பி அறக்கட்டளையின் சிற்பி விருது
- திருப்பூர் தமிழ் சங்க விருது

## 11. தேவதேவன்

| | |
|---|---|
| **இயற்பெயர்** | கைவல்யம் |
| **தந்தை** | பிச்சுமணி |
| **பிறந்த ஆண்டு** | 1948 மே 5 |
| **ஊர்** | ராஜா கோயில் விருதுநகர் மாவட்டம் |
| **பணி** | இடைநிலை ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றவர் இவருக்கு கைவல்யம் என்ற பெயரை சூட்டியவர் ஈவேரா அவர்கள். |

⇒ **இவரின் படைப்புகள்:**

- குளித்து கரை ஏறாத கோபியர்கள்
- மின்னற்பொழுதே தூரம்
- மாற்றப்படாத வீடு
- பூமியை உதறி எழுந்த மேகங்கள்
- நுழைவாயிலிலேயே நின்று விட்ட கோலம்
- சின்னஞ்சிறிய சோகம்
- பறவைகள் காலூன்றி நிற்கும் பாறைகள்.
- நட்சத்திர மீன்
- அந்தரத்திலே ஒரு இருக்கை
- புல்வெளியில் ஒரு கல்
- விண்ணளவு பூமி
- விரும்பிய தெல்லாம்
- விடிந்தும் விடியாத பொழுது

⇒ **விருதுகள்:**

- தமிழக அரசு விருது
- வாழ்நாள் இலக்கியச் சாதனையாளர் விருது



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- விளக்கு விருது
- விஷ்ணுபுரம் விருது
- திருப்பூர் தமிழ்ச்சங்க விருது
- லில்லி தேவசிகாமணி விருது

## 12. ஞானக்கூத்தன்

| | |
|---|---|
| **இயற்பெயர்** | அரங்கநாதன் |
| **ஊர்** | திருஇந்தளூர் ( நாகை மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகில்) |
| **காலம்** | 7–10–1938 முதல் 27–7–2016 வரை |

- திருமந்திரம் நூல் ஏற்படுத்திய தாக்கத்தால் தனது புனைப் பெயராக ஞானக்கூத்தன் என்ற பெயரை அமைத்துக் கொண்டார்.
- இராமகிருஷ்ணன், சா.கந்தசாமி ந.கிருஷ்ணமூர்த்தி ஆகியோருடன் இணைந்து ‘கசடதபற’ என்ற இதழையும், ‘கவனம்’ என்ற சிற்றிதழையும் தொடங்கினார்.
- ‘ழ’ என்ற இதழின் ஆசிரியர்களில் ஒருவராக இருந்தார்.

⇒ **இவருடைய படைப்புகள்:**

- அன்று வேறு கிழமை
- சூரியனுக்குப்பின்பக்கம்
- கடற்கரையில் சில மரங்கள்
- மீண்டும் அவர்கள்
- பென்சில் படங்கள்
- ஞானக்கூத்தன் கவிதைகள்
- என் உளம் நிற்றி நீ
- பிரச்சனை.

⇒ **விருதுகள்:**

- சாரல் விருது
- விளக்கு விருது

## 13. கல்யாண்ஜி

| | |
|---|---|
| **இயற்பெயர்** | சி.கல்யாணசுந்தரம் |
| **தந்தை** | இலக்கியவாதி தி.க.சிவசங்கரன் |
| **ஊர்** | திருநெல்வேலி |
| **பணி** | பாரத ஸ்டேட் வங்கி பணி ஒய்வு |

- இவர் வண்ணதாசன் என்ற புனைப்பெயரில் சிறுகதைகளும், கல்யாண்ஜி என்ற புனைப்பெயரில் கவிதைகளும் எழுதி உள்ளார். இவரது சிறுகதைகள் பல்கலைக்கழகங்களில் பாடமாக வைக்கப்பட்டிருக்கின்றன.

⇒ **விருதுகள்:**

- ஒரு **சிறு இசை** என்ற சிறுகதை நூலுக்காக 2016 –ஆம் ஆண்டு ‘சாகித்ய அகாடமி’ விருதினை பெற்றுள்ளார்.
- 2016 ஆம் ஆண்டிற்கான விஷ்ணுபுரம் விருது இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- தமிழக அரசின் கலை மாமணி விருதினை பெற்றவர்.

⇒ **கவிதை நூல்கள்:**

| | |
|---|---|
| • புலரி | • ஆதி |
| • இன்று ஒன்று நன்று | • நதி |
| • கல்யாண்ஜி கவிதைகள் | • மணல் உள்ள ஆறு. |
| • சின்னு முதல் சின்னு வரை | |

⇒ **கவிதைகள்:**

- கனியான பின்னும் நுனியில் பூ
- சமவெளி
- பற்பசைக் குழாய்களும் நாவல் பழங்களும்
- மனுஷா மனுஷா
- சினேகிதங்கள்
- கனிவு.
- ஒளியிலே தெரிவது
- கிருஷ்ணன் வைத்த வீடு
- அணி நிறம்
- அந்நியமற்ற நதி
- முன்பின்

⇒ **சிறு கதைகள்**

- பெயர் தெரியாமல் ஒரு பறவை
- கனிவு
- விளிம்பில் வேரில் பழுத்தது
- கனவு நீச்சல்
- கலைக்க முடியாத ஒப்பனைகள்
- தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள்
- உயரப் பறத்தல்.

⇒ **கட்டுரை தொகுப்பு :**

- அகமும் புறமும்

⇒ **கடிதத் தொகுப்பு**

- சில இறகுகள் சில பறவைகள்.

## 14. சாலை. இளந்திரையன்

| | |
|---|---|
| **இயற்பெயர்** | வ. இரா.மகாலிங்கம் |
| **பெற்றோர்** | இராமையா–அன்னலட்சுமி |
| **ஊர்** | சாலை நயினார் பள்ளிவாசல் (திருநெல்வேலி மாவட்டம்) |
| **காலம்** | 6–09–1930 முதல் 4–10–1998 வரை |
| **மனைவி** | ஷாலினி இளந்திரையன் |
| **பணி** | தில்லி பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை விரிவுரையாளர் ஆகிய பின் தமிழ்த்துறை தலைவரானார். |

- தனது ஊரின் முதல் பகுதியை இணைத்து சாலை இளந்திரையன் என்ற புனைப் பெயரை அமைத்துக் கொண்டார்.
- இளந்திரையன் என்பது சங்ககால மன்னனின் பெயராகும். உலகத் தமிழ் ஆராய்ச்சி கழகம், இந்திய பல்கலைக்கழக தமிழாசிரியர் மன்றம், டில்லி தமிழ் எழுத்தாளர் சங்கம், உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் தோன்ற காரணமானவர்.

⇒ **படைப்புகள்:**

- சிலம்பின் சிறுநகை
- காக்கை விடு தூது
- பூத்தது மானுடம்
- நடைகொண்ட படைவேழம்
- வீறுகள் ஆயிரம்
- உரைவீச்சு
- அன்னை நீ ஆட வேண்டும்
- நஞ்சருக்குப் பஞ்சணையா ?
- காலநதி தீரத்திலே
- காவல் துப்பாக்கி
- கொட்டியும் ஆம்பலும்
- உள்ளது உள்ளபடி

⇒ **விருதுகள்:**

1991 –ல் பாரதிதாசன் நூற்றாண்டு நிறைவு விழாவில் இவருக்கு பாரதிதாசன் விருது வழங்கப்பட்டது.

## 15. சாலினி இளந்திரையன்

| | |
|---|---|
| **இயற்பெயர்** | கனகசவுந்தரி |
| **பெற்றோர்** | வே.சங்கரலிங்கம்– சிவகாமி அம்மாள் |
| **ஊர்** | விருதுநகர் |
| **சகோதரி** | புகழ் பெற்ற மருத்துவர் ஞானசௌந்தரி |
| **காலம்** | 22–12–1933 முதல் 28–4–2000 வரை |
| **பணி** | புதுடில்லியில் உள்ள திருவேங்கடம் கல்லூரியில் தமிழ் பேராசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். |
| **கணவர்** | சாலை.இளந்திரையன் |

⇒ **படைப்புகள்:**

- பண்பாட்டின் சிகரங்கள்
- எந்திரக கலப்பை
- களத்தில் கடிதங்கள்
- புதிய தடங்கள்
- சங்கத்தமிழரின் மனிதநேய நெறிமுறைகள்
- வாடாமல்லி
- இரண்டு குரல்கள்
- தமிழ் தந்த பெண்கள்
- தமிழ்க்கனிகள்
- படுகுழி
- தமிழனே தலைமகன்


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- ‘மனித வீறு’ என்ற இதழை வெளியிட்டார். சிறப்பாக சொற்பொழிவாற்றும் திறமை உடையவர்.

## 16. ஆலந்துார் கோ.மோகனரங்கன்

| | |
|---|---|
| **பெற்றோர்** | ம.கோபால்–கோ. மீனாம்பாள் |
| **பிறந்த ஆண்டு** | 1942 ஜூன் 1 |
| **ஊர்** | ஆலந்துார் (காஞ்சிபுரம் மாவட்டம்) |

- **குறும்பா** என்ற பெயரிலும், **குறுந்தொகையின் குழந்தைகள்** என்ற பெயரிலும், ஹைக்கூ கவிதைகள் எழுதியுள்ளார்.
- இவர் எழுதிய ‘வணக்கத்திற்குரிய வரதராசனார் கதை’ என்னும் நூல் 1982 – ஆம் ஆண்டு தமிழக அரசின் முதல் பரிசை பெற்றது.
- ‘தாத்தாவுக்கு தாத்தா’ என்னும் தலைப்பில் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் வரலாற்றை எழுதியுள்ளார்.
- வானொலி, தொலைக்காட்சி, பாவரங்க மேடை இவற்றில் ஏதேனும் ஒன்றில் இவரது தமிழ் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

⇒ **படைப்புகள்**

- சித்திர பந்தல்
- வைர மூக்குத்தி
- மோகனரங்கன் கவிதைகள்
- புதுமனிதன்
- காலக்கிளி
- யாருக்கு பொங்கல்
- இமயம் எங்கள் காலடியில் (தமிழக அரசின் விருது பெற்றது)
- கயமைக் களைவாய்
- அழகிய தமிழில் எழுதுங்கள் (தமிழ்நாட்டின் தொடக்கப் பள்ளிகளில் பாடமாக அமைந்துள்ளது)
- மனிதனே புனிதனாவாய்
- நல்ல உள்ளம் நாளை மலரும்
- சவால் சம்பந்தம்.

⇒ **சிறப்பு பட்டங்கள்:**

- கவி வேந்தர்
- முத்தமிழ் கவிஞர்
- முத்திரை பாவலர்

⇒ **விருதுகள்:**

- பாவேந்தர் விருது
- குழந்தை இலக்கிய மாமனி விருது.

## 17. நா. காமராசன்

| | |
|---|---|
| **பெற்றோர்** | நாச்சிமுத்து– இலட்சுமி அம்மாள் |
| **பிறந்த ஆண்டு** | 1942 |
| **ஊர்** | போ.மீனாட்சிபுரம் தேனி மாவட்டம் |
| **மனைவி** | லோகமணி அம்மையார் |
| **பட்டங்கள்** | கவியரசு, புதுக்கவிதை ஆசான் |

- இவர் 1964 – இல் நடந்த இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டு காலில் விலங்கிடப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.
- உத்தமபாளையம் ஹாஜி கருத்தராவுத்தர் கல்லூரியில் விரிவுரையாளராகவும், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் மொழிபெயர்ப்பு துறையிலும் பணியாற்றியவர். பல திரைப்படங்களுக்கும் பாடல்கள் எழுதியுள்ளார். இவர் உருவக கவிஞர் ஆவார்.

⇒ **படைப்புகள்:**

- கருப்பு மலர்கள்
- சூரியகாந்தி
- சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள்
- தாஜ்மகாலும் ரொட்டித் துண்டும்
- அந்த வேப்பமரம்
- ஆப்பிள் கனவு
- நாவல் பழம்
- கிறுக்கன்

⇒ **விருதுகள்**

- கலைமாமணி விருது
- பாரதிதாசன் விருது
- சிறந்த பாடலாசிரியர் விருது
- சிறந்த இலக்கிய படைப்புக்கான ஐநா சபையின் **‘யுனெஸ்கோ’** விருது இவரின் கருப்பு மலர்கள் தொகுதிக்காக கிடைத்தது.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

## 18. ந.கருணாநிதி

| | |
|---|---|
| பெற்றோர் | நடேசன்– சிவகாமி அம்மாள் |
| ஊர் | சிதம்பரம் |
| பிறந்த ஆண்டு | 1939 மார்ச் 28 |
| பணி | பூவிருந்தவல்லி அரசு மேல்நிலைப் பள்ளியில் முதுகலை தமிழ் ஆசிரியராக பணியாற்றி ஒய்வு பெற்றவர். |

⇒ **படைப்புகள்:**

- தொல்காப்பியம் முழுமைக்கும் உரை நூல்
- சென்னை வானொலி நிலையத்தாரால் ஒளிபரப்பப்படும் மெல்லிசை பாடல்கள் பல.
- புதுக்கவிதைகள் பல.

## 19. வள்ளிக்கண்ணன்

| | |
|---|---|
| இயற்பெயர் | ரா.சு. கிருஷ்ணசாமி |
| பெற்றோர் | ராமு சுப்பிரமணிய பிள்ளை – மகமாயி அம்மாள் |
| காலம் | 12–11 –1920 முதல் 9–11 –2006 வரை |

⇒ **படைப்புகளில் சில :**

- நாட்டியக்காரி
- மத்தாப்பு சுந்தரி
- ராதை சிரித்தாள்
- விடியுமா ?
- நாடகம்
- ஒய்யாரி
- டால்ஸ்டாய் கதைகள் (மொழியாக்கம்)
- சகுந்தலா
- விடிவெள்ளி
- வசந்தம் மலர்ந்தது
- நினைவுச்சரம்
- சுதந்திர பறவைகள்.

‘வல்லிக்கண்ணனின் சிறப்புச் சிறு கதைகள் என்னும் நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2002 –ஆம் ஆண்டிற்கான சிறந்த சிறுகதைக்கான பரிசினை வென்றுள்ளது.

**“ஏழையின் குடிசையில் அடுப்பும் விளக்கும் தவிர எல்லாமே எரிகின்றன”** என்பது இவரின் எளிய நடையை எடுத்துக்காட்டுகிறது.

## 20. கவிஞர் மீரா

| | |
|---|---|
| இயற்பெயர் | மீ.இராசேந்திரன் |
| பெற்றோர் | மீனாட்சி சுந்தரம்– லட்சுமி அம்மாள் |
| காலம் | 1938 முதல் 2002 வரை |
| பிறந்த ஊர் | சிவகங்கை |
| பணி | சிவகங்கை மன்னர் கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றி பின்னர் முதல்வராக பொறுப்பேற்று ஒய்வு பெற்றார். |
| தோழர் | கவிக்கோ அப்துல் ரகுமான் |
| சிறப்பு | எழுத்தாளர்களின் வேடந்தாங்கல் என அழைக்கப்பட்டார். |
| நடத்திய இதழ்கள் | அன்னம் விடு தூது, கவி |
| படைப்புகள் | மீ.இராசேந்திரன் கவிதைகள், மூன்றும் ஆறும், மன்னர் நினைவில் கனவுகள் + கற்பனைகள், காகிதங்கள், ஊசிகள், கோடையும் வசந்தமும், குக்கூ. |
| பெற்ற விருதுகள் | தமிழ் வளர்ச்சிக் கழக பரிசு, பாவேந்தர் விருது, சிற்பி இலக்கிய விருது, தமிழ் சான்றோர் பேரவை விருது. |

## 21. நெல்லை சு. முத்து

| | |
|---|---|
| பெற்றோர் | எம்.சுப்பிரமணிய பிள்ளை– சொர்ணத்தம்மாள் |
| பிறந்த ஆண்டு | மே 10, 1951 |
| ஊர் | திருநெல்வேலி |
| பணி | விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் சதீஷ் தவான் விண்வெளி மையம் மற்றும் இந்திய விண்வெளி மையம் ஆகியவற்றில் பணியாற்றியவர். |

⇒ **விருதுகள்:**

தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் விருதினை நான்கு முறை பெற்றுள்ளார்.

| விருது பெற்ற ஆண்டு | நூல் பெயர் |
|---|---|
| 2000 | விண்வெளி 2057 |
| 2004 | அறிவூட்டும் விஞ்ஞான விளையாட்டு |
| 2005 | ஐன்ஸ்டீனும் அண்டவெளியும் |
| 2010 | அறிவியல் வரலாறு |

மலேசியாவில் உலகத் தமிழ் கவிஞர் பேரவை இவருக்கு '**கவி மாமணி**' என்ற பட்டத்தை வழங்கியுள்ளது.

⇒ **படைப்புகள்:**

'**செவ்வாயில் உள்வேக்கையும் நல்வாய்ப்பும்**' என்ற தலைப்பில் செவ்வாய் பற்றிய கிரேக்க இதிகாச புராண கதைகள் பற்றி எழுதியுள்ளார். மேலும் 70–க்கும் மேற்பட்ட தலைப்புகளில் நூல்களை எழுதியுள்ளார்.

## 22. கவிஞர் தமிழ் ஒளி

| இயற்பெயர் | விஜயரங்கம் |
|---|---|
| பெற்றோர் | சின்னையா– செங்கேணி அம்மாள் |
| ஊர் | புதுவை |
| காலம் | 21–09–1924 முதல் 24–03–1965 வரை |
| சிறப்பு | பாரதியாரின் வழி தோன்றலாகவும், பாரதிதாசனின் மாணவராகவும் விளங்கினார். |
| புனை பெயர் | தமிழ் ஒளி, விஜயன், சி.வி.ர |

⇒ **இலக்கிய பணிகள்:**

- முன்னணி, புதுமை இலக்கியம், சாட்டை போன்ற இதழ்களில் பணியாற்றினார். '**சன யுகம்**' என்னும் **திங்கள் இதழை** தம் சொந்த முயற்சியில் நடத்தி மார்க்கியக் கருத்துக்களை பரப்பினார்.

⇒ **படைப்புகள்:**

- கவிஞனின் காதல்
- புத்தர் பிறந்தார்
- நிலைபெற்ற சிலை
- கோசலக் குமாரி
- வீராயி
- மாதவிக் காவியம்
- மே தின ரோசா
- சிலப்பதிகாரம் காவியமா ? நாடகமா ?
- விதியோ வீணையோ ?
- திருக்குறளும் கடவுளும்
- கண்ணப்பன் கிளிகள்
- தமிழர் சமுதாயம் , குருவிபட்டி.

## 23. கவிஞர் வைரமுத்து

| இயற்பெயர் | வைரமுத்து |
|---|---|
| பெற்றோர் | ராமசாமி தேவர்– அங்கம்மாள் |
| பிறந்த ஆண்டு | 13–07–1953 |
| பிறந்த ஊர் | மெட்டூர் (தேனி மாவட்டம்) |

⇒ **விருதுகள்:**

- கலைமாமணி 1990
- சாகித்திய அகாதமி விருது 2003 ( கள்ளிக்காட்டு இதிகாசம்)
- பத்ம பூஷன் விருது 2014
- இந்தியாவின் சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருது ஏழு முறை
- மாநில அரசின் விருது ஆறு முறை

⇒ **சிறப்பு:**

இவருடைய கவிதைகள் இந்தி, தெலுங்கு, மலையாளம், வங்காளம், ஆங்கிலம் உள்ளிட்ட பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

## 24. அழகிய பெரியவன்

| இயற்பெயர் | அரவிந்தன் |
|---|---|
| ஊர் | பேரணாம்பட்டு வேலூர் மாவட்டம் |
| பணி | அரசு பள்ளி ஒன்றில் ஆசிரியர் |



www.tnpscgroup4.in

⇒ **படைப்புகள் – தகப்பன் கொடி** (புதினம்) 2003– ஆம் ஆண்டில் தமிழக அரசின் விருதினை பெற்றது.

⇒ **சிறுகதைகள்** – குறடு, நெரிக்கட்டு, கிளி அம்மாவின் இளஞ்சிவப்புக் காலை.

⇒ **கவிதைகள் –** உனக்கும் எனக்கும் ஆன சொல், அரூப நஞ்சு

⇒ **கட்டுரைகள் –** பெருகும் வேட்கை, மீள்கோணம், மூடிய முகங்களில்.

## 25. ஆத்மா நாம்

| | |
|---|---|
| **இயற்பெயர்** | மதுசூதனன் |
| **காலம்** | 18–01–1951 முதல்<br>6 – 07–1984 வரை |

- ஆத்மா நாம் தமிழ் கவிதை ஆளுமைகளில் குறிப்பிடத்தக்கவர்.
- அவருடைய முக்கியமான கவிதை தொகுப்பு 'காகிதத்தில் ஒருக்கோடு'.
- **'ழ'** என்னும் சிற்றிதழை நடத்தியவர்.
- கவிதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு என்று மூன்று தலங்களிலும் இயங்கியவர்.
- இவருடைய **'கவிதைகள் ஆத்மா நாம் கவிதைகள்'** என்னும் பெயரில் ஒரே தொகுப்பாக வெளிவந்துள்ளன.

## 26. இன்குலாப்

| | |
|---|---|
| **இயற்பெயர்** | சாகுல் அமீது |
| **பிறந்த ஊர்** | கீழக்கரை |
| **பன்முக சிறப்புகள்** | தமிழ் கவிஞர், பேராசிரியர், சொற்பொழிவாளர், நாடக ஆசிரியர் சிறுகதை எழுத்தாளர் பொதுவுடமை சிந்தனையாளர். |

⇒ **படைப்புகள்**

⇒ **சிறுகதை தொகுதி**

பாலையில் ஒரு சுனை. 12க்கும் மேற்பட்ட கவிதை தொகுதிகள் அனைத்தும் ஒன்றாக தொகுக்கப்பட்டு, 'ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்' என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது.

⇒ **கட்டுரை தொகுதிகள்**

- யு காகினி, ஆனால்.

⇒ **நாடக நூல்கள்**

- ஔவை
- மணிமேகலை
- குரல்கள்
- துடி
- மீட்சி

⇒ **விருதுகள்:**

- 'காந்தள் நாட்கள்' என்னும் கவிதை தொகுதிக்காக 2017–ஆம் ஆண்டில் இவருக்கு **சாகித்ய அகாடமி** விருது வழங்கப்பட்டுள்ளது.
- அவரது மரணத்திற்கு பின் வழங்கப்பட்டதால் அதனை அவரது குடும்பத்தினர் ஏற்க மறுத்து விட்டனர்.
- சிற்பி இலக்கிய விருது, கவிஞர் வைரமுத்து விருது, 2006–ஆம் ஆண்டு தனக்கு வழங்கப்பட்ட தமிழக அரசின் கலைமாமணி விருதுநகர் திருப்பி அளித்துவிட்டார்.
- ஈழத் தமிழர்களுக்காக அரசு தவறிவிட்டதாக இதற்கு காரணம் தெரிவித்தார்.

⇒ **மறைவு:**

- உடல் நலக்குறைவால் 1–12–2016 –ஆம் ஆண்டு (73 வயது) அன்று மறைந்தார்.
- அவரின் விருப்பப்படி அவரது உடல் செங்கை அரசு மருத்துவக் கல்லூரிக்கு கொடை அளிக்கப்பட்டது.

## 27. இந்திரன்

| | |
|---|---|
| **இயற்பெயர்** | இராசேந்திரன் |
| **சிறப்பு** | கலைவிமர்சகர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர், ஓவியர் |
| **விருது** | ஒரியமொழிக் கவிஞர் **மனோரமா பிஸ்வாஸின்** "பறவைகள் ஒருவேளை தூங்க போயிருக்கலாம்" |

| | |
|---|---|
| | என்னும் இவரின் மொழிபெயர்ப்பு நூலுக்காக 2011 –ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றார். |
| **கவிதை தொகுப்புகள்** | முப்பட்டை நகரம், சாம்பல் வார்த்தைகள் உள்ளிட்டவை. |
| **கட்டுரை நூல்கள்** | தமிழ் அழகியல், நவீன ஓவியம் உள்ளிட்டவை. |
| **நடத்திய இதழ்கள்** | வெளிச்சம், நுண்கலை. |

www.tnpscgroup4.in